**பத்திரிக்கை செய்தி**

செ.வெ.எண் : 34 நாள் :24.05.2019

கரூர் மாவட்டத்தில் குழந்தைகள் பாதுகாப்பினை உறுதி செய்ய கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டத்தில் அதன் உறுப்பினர்கள் (Village Level Child Protection Committee Members) கலந்துகொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தல்.

ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு கரூர் மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்தில் உள்ள 157 கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்கள் 2013 ஆண்டு முதல் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இக்குழு கூட்டம் காலாண்டிற்கு ஒரு முறை கூட்டப்பட்டு, அக்கிராமத்தில் குழந்தை தொடர்புடைய பிரச்சனைகளை கலந்தாலோசித்து குழந்தைகள் பாதுகாப்பினை உறுதி செய்யும். இக்குழுவில் உள்ள உறுப்பினர்களான

1. கிராம ஊராட்சி தலைவர் – தலைவர்
2. கிராம நிர்வாக அலுவலர் – கூட்ட அமைப்பாளர்
3. அந்தப்பகுதி பள்ளியிலுள்ள தலைமையாசிரியர் (துவக்க/ நடுநிலை உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளி ) – உறுப்பினர்
4. குழந்தைகளின் பிரதிநிதியாக இரண்டு குழந்தைகள் (உள்ளூர்) பள்ளித்தலைமையாசிரியரால் தேர்வு செய்யப்படவேண்டும்) – உறுப்பினர்கள்
5. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு பணியாளர் – உறுப்பினர்
6. அங்கன்வாடி பணியாளர் – உறுப்பினர்
7. கிராம செவிலியர் / துணை சுகாதார செவிலியர் – உறுப்பினர்
8. தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதி ஒருவர் (கிராம அளவில்) – உறுப்பினர்
9. கிராம அளவில் செயல்படும் சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவர் – உறுப்பினர்
10. உள்ளூர் காவல் நிலைய உறுப்பினர் ஒருவர் (காவல்துறை ஆய்வாளரால் நியமிக்கப்படவேண்டும்.) – உறுப்பினர்

ஆகியோர் 30.05.2019 அன்று முற்பகல் 11.00 மணிக்கு தங்கள் பகுதிகளில் நடைபெறவுள்ள கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்டு குழந்தை பாதுகாப்பினை உறுதி செய்திடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்.